**மானியக் கோரிக்கை எண்: 28**

# செய்தி மற்றும் விளம்பரம்

## பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | |
| 1. | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 4 |
| 2. | மேற்கோள் பிரிவு | 13 |
| 3. | நினைவகங்கள் | 14 |
| 4. | அரசு விழாக்கள் | 22 |
| 5. | விளம்பரம் | 28 |
| 6. | தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் மற்றும் திரைப்பட மானியம் | 33 |
| 7. | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 41 |
| 8. | எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 43 |
| 9. | திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு | 47 |
| 10. | தமிழரசு | 52 |
| 11. | பொருட்காட்சி | 56 |
| 12. | மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 60 |
| 13. | செய்தி நிலையங்கள் | 62 |
| | நிறைவுரை | |

மானியக் கோரிக்கை எண்: 28

# செய்தி மற்றும் விளம்பரம்

கொள்கை விளக்கக்குறிப்பு

2010–2011

**முகவுரை**

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்”.

என்னும் அய்யன் திருவள்ளுவரின் அறிவு மொழிக்கேற்ப, எல்லாப் பிரிவு மக்களுக்கும் ஏற்றம் தரும் மக்கள் நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் தமிழக அரசின் குறிக்கோளுக்கேற்ப செய்தி மக்கள் தொடர்புத்துறை பெரும்பணி ஆற்றி வருகிறது.

“தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும்; தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்தமொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும்”

– என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் உள்ளக்கிடக்கையை நிறைவேற்றும் வகையில், தமிழின் நலத்தையும், தமிழக மக்களின் நலத்தையும் வளத்தையும் பெருக்கிட எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு நிறைவேற்றி வருகிறது.

ஏழை எளியோர் வாழ்க்கை உயர, மகளிர் மனம் மகிழ்ந்திட, உழைக்கும் மக்கள் ஊக்கம் பெற்றிட, அரசு செயல்படுத்தும் திட்டங்களையும், அவற்றால் விளையும் நன்மைகளையும் எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், இனிய தமிழில் தகவல்களாகத் தருவது இத்துறையின் முதன்மையான இலக்காகும். நோக்கம் நிறைவேற, நொடிப் பொழுதையும் வீணாக்காது புதிய தொழில்நுட்ப முறைகள் அனைத்தையும் பயன்படுத்தி எல்லா வழிகளிலும் விளம்பரப் பணிகளைச் சிற்றூர், பேரூர், நகரம், மாநகரம் என எல்லாப் பகுதிகளுக்கும் சென்று இத்துறை இடைவிடாது நிறைவேற்றி வருகிறது.

மக்களாட்சிக்கு வலிவும், பொலிவும் சேர்க்கும் இன்றியமையாத ஊடகங்களாகத் திகழும் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலமாக அரசின் திட்டங்கள், அறிவிப்புகள், தகவல்கள் ஆகியவற்றை மக்களுக்குத் தினந்தோறும் செவ்வனே அளிக்கும் **செய்தி வெளியீட்டுப் பிரிவு;**

நாட்டிற்கு உழைத்த நல்லோர்கள், தமிழ் அறிஞர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் ஆகியோரைப் போற்றும் வகையில் அவர்களுக்குத் திருவுருவச் சிலைகளையும், அவர்தம் பெயர்களை நிலைநாட்டும் வகையில் நினைவு மண்டபங்களையும் அமைத்து அவைகளைப் பராமரிப்பதுடன், அவர்களது நினைவைப் புகழ்ந்து போற்றும் வகையில் விழாக்கள் எடுத்துச் சிறப்புச் செய்யும் **நினைவகங்கள் பிரிவு;**

அரசின் திட்டங்கள் மற்றும் அரசுத் துறைகளின் சாதனைகள் ஆகியவற்றை மக்கள் அறியச் செய்திடும் வகையில் விளம்பரம் தரும் **விளம்பரப் பிரிவு;**

நாளிதழ்களைப் பாதுகாத்து அரசுக்குத் தேவைப்படும் நேரத்தில் தேவையான செய்தி நறுக்குகளைத் தரும் **மேற்கோள் பிரிவு;**

கல்லூரி மாணவ, மாணவியருக்கும், ஆய்வு செய்யும் மாணவ, மாணவியருக்கும், பொது மக்களுக்கும் பயன்படும் வரலாறு, அறிவியல், அரசியல் நூல்களைப் பாதுகாத்து அவர்களுக்குப் பயன்படும் வகையில் செயல்படும் **செய்தி நிலையங்கள்;**

அரசின் திட்டங்கள், செயல்பாடுகள், சாதனைகளை மக்களுக்கு விளக்கும் வகையில் செய்திப்படங்கள் மற்றும் குறும்படங்களைத் தயாரித்து அளிக்கும் **தமிழ்நாடு திரைப்படப்பிரிவு;**

திரைப்படத் துறையின் பல்வேறு தொழில்நுட்பக் கலைகளை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் **எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்;**

அரசின் சாதனைகள், திட்டங்கள், செயல்பாடுகள் ஆகியவற்றை மக்களிடம் எளிதாக அச்சு வடிவிலும், இணையதளம் வழியாகவும் கொண்டு செல்லும் **தமிழரசு** இதழ்;

எளிய மக்களும், பாமர மக்களும் அரசின் சாதனைகள், திட்டங்கள் மற்றும் அரசின் செயல்பாடுகளை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளை நடத்திடும் **பொருட்காட்சிப் பிரிவு;**

மாவட்டங்களில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் அரசின் சாதனைகளையும், அரசுத் துறைகளின் செயல்பாடுகளையும் விளக்கும் பல்துறைப் பணிவிளக்க முகாம் நடத்துவது மற்றும் தொலைக்காட்சி, பத்திரிகைகள், வீடியோ படக்காட்சி மூலமாகவும் அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பது போன்ற பல சீரிய பணிகளைச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் செவ்வனே செய்து வருகின்றனர். இத்தகைய இன்றியமையாப் பணிகளைச் செய்து அரசுக்கும், மக்களுக்கும் பாலமாகச் செயல்படுவதில் செய்தி மக்கள் தொடர்புத் துறை முதன்மையான துறையாகச் செயல்பட்டு வருகிறது.

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு, விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் செயல்பட்டு வரும் ஒரு முக்கியப் பிரிவாகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், அரசின் சாதனைகள், அறிவிப்புகள், அரசின் நலத்திட்டங்கள், ஆக்கப்பணிகள் குறித்த செய்திகள், அரசு சார்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் விவரங்கள், அதன் தொடர்புடைய வண்ணப் புகைப்படங்கள் ஆகியவற்றை விடுமுறை நாட்கள் உட்பட 24 மணி நேரமும், நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி நிறுவனங்கள், காலமுறை இதழ்கள் மற்றும் இணையதளச் செய்தி நிறுவனங்கள் என ஏறத்தாழ 200 ஊடகங்களுக்கு தொலையச்சு மற்றும் கணினி உதவியுடன், மின் அஞ்சல் மூலமாக அனுப்பி அவற்றை அனைத்து ஊடகங்களின் மூலமாகவும் மக்கள் உடனுக்குடன் அறியச் செய்யும் பணியினைச் செய்தி வெளியீட்டுப் பிரிவு செவ்வனே செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் நடத்தப்பெறும் செய்தியாளர் கூட்டங்களுக்கு உரிய ஏற்பாடுகளையும் இப்பிரிவே செய்து வருகிறது. மேலும், மாவட்டங்களில் உள்ள செய்தியாளர்களுக்கு அரசின் முக்கிய அறிவிப்புகளையும், செய்தி வெளியீடுகளையும் தெரிவிக்கும் வகையில், மாவட்டங்களில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு முக்கியச் செய்திகள் அனுப்பிவைக்கப்படுகின்றன. அனைத்து அமைச்சர் பெருமக்களும், துறைச் செயலாளர்களும் கலந்து கொள்ளும் விழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை ஆகியவற்றிற்கு பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினர் செய்தி சேகரிக்க அனைத்து ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் அரசு விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் குறித்த தகவல்கள், புகைப்படங்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் தலைமையிடத்தில் பெறப்பட்டு, தலைமையிடத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் இடம் பெறச் செய்யவும் மற்றும் வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி/ஒளிபரப்பச் செய்யவும் இப்பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.4.2009 முதல் 31.03.2010 வரை பின்வருமாறு செய்தி வெளியீடுகளும், செய்திக் குறிப்புகளும், புகைப்படம் / ஒளிப்பதிவு / செய்தி சேகரிப்புக் கடிதங்களும் பத்திரிகைகள்/ஊடகங்கள்/ செய்தி நிறுவனங்களுக்குத் தலைமை இடத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன.

| கால வரையறை | செய்தி வெளியீடுகள் | செய்திக் குறிப்புகள் | புகைப் படங்கள் | செய்தியாளர் கூட்டங்கள் |
|---|---|---|---|---|
| 1.4.2009 முதல் 31.3.2010 வரை | 1,140 | 150 | 696 | 52 |

## பத்திரிகையாளர் நலன்கள்

### பத்திரிகையாளர் ஓய்வூதியம்

இத்திட்டம் 1987ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி, பணியிலிருந்து ஓய்வுபெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம், இவ்வரசு பொறுப்பேற்றபின் ரூ.3,000லிருந்து ரூ.4,000ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இந்த நிதி ஆண்டில் (2009 – 2010) ரூ.37.35 இலட்சம் ஓய்வூதியத்திற்காக ஒதுக்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றபிறகு 31 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. 1.4.2009 முதல் 31.3.2010 வரை 9 பத்திரிகையாளர்களுக்குப் பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் ஆண்டுவாரியான விவரம்:

| ஆண்டு | வழங்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| 2006–2007 | 6 |
| 2007–2008 | 10 |
| 2008–2009 | 6 |
| 2009–2010 | 9 |
| மொத்தம் | 31 |

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் 31.3.2010 வரை 95 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது 62 பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

### பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்

1999ஆம் ஆண்டு முதல், ஓய்வூதியம் பெற்று இயற்கை எய்திய பத்திரிகையாளரின் மனைவிக்குக் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம், இவ்வரசு பொறுப்பேற்றபின் ரூ.1,500லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தப்பட்டு, 2006ஆம் ஆண்டு முதல் 31.3.2010 வரை 24 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதி ஆண்டில்
(2009–2010) 5.40 இலட்சம் ரூபாய் குடும்ப ஓய்வூதியத்திற்காக ஒதுக்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்றபிறகு
9 பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கியுள்ளது. 1.4.2009 முதல் 31.3.2010 வரை 4 பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் மறைவுக்குப்பின் அவர்களுடைய மனைவியர்க்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கிட, இறப்புச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பெற்று

ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள காலதாமதத்தினைத் தவிர்த்திட தற்போது ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்களுக்கு வாரிசு நியமனம் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி**

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துபவர் பணிகளில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி, மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் பத்திரிகையாளர் நலன் கருதி, 20 ஆண்டுகள் பணி புரிந்தால்தான் குடும்ப உதவி நிதி வழங்கப்படும் என்பது 2006ஆம் ஆண்டில் பின்வருமாறு மாற்றி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித்தொகை |
|---|---|
| 5 | ரூ.50 ஆயிரம் |
| 10 | ரூ. 1 இலட்சம் |
| 15 | ரூ.1.5 இலட்சம் |
| 20 | ரூ.2 இலட்சம் |

31.3.2010 வரை 44 பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப உதவி நிதியாக ரூ.41.05 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபிறகு 16 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.26,25,000 வழங்கப்பட்டுள்ளது. 1.4.2009 முதல் 31.3.2010 வரை ஐந்து பத்திரிகையாளர் குடும்பங்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி**

இவ்வரசு பொறுப்பேற்றபின் 6 பத்திரிகையாளர்களின் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவியாகவும், ஒரு பத்திரிகையாளர் மகளின் அறுவைச் சிகிச்சைக்கான நிதியுதவியாகவும், மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இதுவரை ரூ. 6.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1.4.2009 முதல் 31.3.2010 வரை ஒரு பத்திரிகையாளருக்கு மருத்துவ சிகிச்சை நிதியுதவியாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி**

பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகம் முழுவதும் 266 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வரசு பொறுப்பேற்றபின் 2006 முதல் 22 மாவட்டங்களில் 115 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி**

இத்திட்டத்தின்கீழ், இதுவரை 603 பத்திரிகையாளர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வரசு பொறுப்பேற்றபிறகு, 234 செய்தியாளர்கள்/புகைப்படக்காரர்களுக்கு வீட்டுமனைகள் சலுகை விலையில் சென்னை, வேலூர், சேலம், திண்டுக்கல், திருச்சி, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ளன.

நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் தகுதியுள்ள பத்திரிகையாளர்களுக்கு வரும் நிதியாண்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளன.

**பத்திரிகையாளர் நல நிதியம்**

14.01.2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.17, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை மூலம், பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ரூபாய் ஒரு கோடி தொகை தனியே ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகைக்கு மாதம் ஒன்றிற்கு வட்டியாக ரூ.83,333 கிடைத்து வருகிறது. இந்த வட்டித் தொகையிலிருந்து, கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு அதிகபட்சமாக ரூ.50 ஆயிரம் வரை மருத்துவ நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை சிறப்பு நிகழ்வாக ஒருவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் மருத்துவ நிதி உதவி அளிக்கப்பட்டது.

**செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டை**

செய்தியாளர்களுக்கு அரசு அமைத்துள்ள "பத்திரிகையாளர் அங்கீகாரக் குழு"வின் பரிந்துரையின் பேரில் ஆண்டுதோறும் நாளிதழ்கள்/தொலைக்காட்சிகள்/செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டை (Accreditation Card) வழங்கப்பட்டு வருகிறது. 2010ஆம் ஆண்டில் சென்னையில் 597 பத்திரிகையாளர்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 89 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் 718 பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டைகள் (Identity Card) வழங்கப்பட்டுள்ளன.

**பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை**

அங்கீகார அட்டை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அடையாள அட்டை வழங்கப் பெற்ற பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு வசதியாக, அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிப்பதற்கு ஏதுவாக, ஓர் ஆண்டு காலத்திற்குச் செல்லத்தக்க வகையில் இலவசப் பேருந்துப் பயண அட்டை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு, சென்னையில் அங்கீகார அட்டை பெற்ற 300 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 1,025 பத்திரிகையாளர்களுக்கும் ஆக மொத்தம் 1,325 இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கும் வகையில் ஓராண்டுக்கு ஏறத்தாழ ரூ.55 இலட்சம் தொகையை போக்குவரத்து நிறுவனங்களுக்கு இத்துறை ஈடுசெய்கிறது. இவ்வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 1999–2000 முதல் 2007–2008 முடிய, இலவசப் பயண அட்டை வழங்கிய செலவினம் ரூ.402.47 இலட்சத்தினை இத்துறை 2009–2010 ஆம் நிதியாண்டில் ஈடுசெய்துள்ளது.

2009–2010ஆம் ஆண்டில் 1,325 பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதன் உத்தேசச் செலவினம் ரூ.55 இலட்சம் ஆகும்.

**காலமுறை இதழ் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அட்டை**

காலமுறை இதழ்களின் பத்திரிகையாளர்களுக்கு "செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழு"வின் பரிந்துரையின் பேரில், செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. 2010ஆம் ஆண்டில் சென்னையில் பணிபுரியும் 222 செய்தியாளர்/புகைப்படக்காரர்களுக்கு செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**புகைப்படப் பிரிவு**

ஏற்கெனவே புகைப்படப் பிரிவில் ஆரம்ப காலங்களில் எடுக்கப்பட்டு வந்த கருப்பு–வெள்ளை புகைப்படங்கள், இப்பிரிவிலேயே பிரதிகள் எடுக்கப்பட்டு, நாளிதழ்களுக்கும், காலமுறை இதழ்களுக்கும், இருசக்கர ஊர்திப் பணியாளர் மூலம் அனுப்பப்பட்டு வந்த நிலையை மாற்றி மின் ஆளுமை அறிமுகத்திற்குப் பின்னர், தற்போது புதிய வகை டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவை மின் அஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்கு தலைமைச் செயலகத்திலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களை உடனுக்குடன் அனுப்பும் வகையில், இணையதள வசதியுடன் கூடிய 3 புதிய மடிக்கணினிகள் வாங்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தே புகைப்படங்கள் உடனுக்குடன் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்றபிறகு அரசுப் புகைப்படக்காரர்களுக்கு ரூ.13.94 இலட்சம் செலவில் 6 புகைப்படக்கருவிகள் துணைக்கருவிகளுடன் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

நவீன பயன்பாட்டிற்கு ஏற்றவாறு, மின் ஆளுமையின் உதவியோடு, நிகழ்ச்சிகளில் எடுக்கப்படும் படங்கள் அனைத்தும் குறுந்தகட்டிலும் பதிவு செய்யப்பட்டு அவை எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏதுவாக பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே இப்பிரிவிலுள்ள அரிய புகைப்பட நெகட்டிவ் படச்சுருள்களைப் பாதுகாத்து வரிசைப்படுத்தி, தலைப்பிட்டு அவற்றை மின்னணு முறையில் மாற்றிட (Digital scanning), 2009–10 ஆம் ஆண்டு ரூ.13.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (ELCOT) ஒப்படைக்கப்பட்டது. அதுபோன்றே எண் அலகு ஒளிப்படக் கருவிகள் (Digital Cameras) ஐந்து வாங்க, ரூ.12.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கருவிகள் வாங்கி வழங்கிட தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**சென்னைப் பத்திரிகையாளர் சங்க அமைப்பிற்குப் புதிய கட்டடம்**

சென்னைப் பத்திரிகையாளர்கள் பயன்பெற சென்னைப் பத்திரிகையாளர் சங்கத்திற்கு ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ. 30 இலட்சம் தமிழக அரசு அனுமதித்து, ஆணையிடப்பட்டு, புதிய கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டன. பணிகளை முடிக்க பொதுப்பணித்துறை மறு மதிப்பீடு செய்து கோரியதற்கிணங்க அரசு கூடுதலாக ரூ.9 இலட்சம் 2010–2011ஆம் ஆண்டில் ஒதுக்கியுள்ளது.

## மேற்கோள் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமையகத்தில் உள்ள மேற்கோள் பிரிவு பத்திரிகைச் செய்திகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் பணியினைச் செவ்வனே செய்து வருகிறது. இப்பிரிவில் நாள்தோறும் வெளிவரும் காலை–மாலை நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்தி நறுக்குகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு அனுப்பும் பணி நடைபெறுகிறது. மேலும், காலை நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வரும் முக்கியச் செய்தி நறுக்குகள் மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களின் பார்வைக்கும், நடவடிக்கைக்கும் தொகுத்து அனுப்பும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. முக்கிய தமிழ், ஆங்கில நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் இவை தேவைப்படும்போது மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் 1867இன்படி புத்தகப் பதிவாளராகவும் செயல்படுவதால், ஆண்டுதோறும் வெளியிடப்படும் புத்தகங்களில் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு, முறையாகப் பதிவு செய்யப்படுகிறது. ஏப்ரல் 2009 முதல் பிப்ரவரி 2010 வரை 372 புத்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## நினைவகங்கள்

'வெள்ளையனே வெளியேறு'' என வீறு கொண்டெழுந்து, தன்னுயிரைத் துச்சமென மதித்து இரவு பகல் பாராமல், தன் வாழ்க்கையையே தாய்நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணித்த தியாகச் செம்மல்கள் – கன்னித் தமிழ் மொழியின் மேன்மையைப் பேணிக்காத்திட்ட மொழிப்போர்க் காவலர்கள் ஆகியோரின் மாண்புகளை நாட்டு மக்கள் ஆண்டுதோறும் நினைவு கூர்ந்து, அவர்களது உன்னத இலட்சியங்களை நெஞ்சில் நிறுத்தி தாய்நாட்டுச் சேவையில் இளைஞர்களை ஈடுபடத் தூண்டும் வகையில் அவர்களின் நினைவாக அரசு நினைவகங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போது 50 நினைவகங்கள், 3 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா ஆகியன செய்தி மக்கள் தொடர்புத் துறையால் உருவாக்கப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**நினைவகங்கள்**

1. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம்.
2. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.
3. தந்தை பெரியார் நினைவகம், வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்.
4. பெரியார்–அண்ணா நினைவகம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
5. தீரன் சின்னமலை மணிமண்டபம், ஓடா நிலை அரச்சலூர், ஈரோடு மாவட்டம்.
6. மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்._
7. வள்ளல் அதியமான் கோட்டம், தருமபுரி மாவட்டம்.
8, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல் மாவட்டம்.
9. வ.வே.சுப்பிரமணியம் நினைவில்லம், வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
10. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
11. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.
12. தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவில்லம், உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம்.

13. தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம்,
திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்.

14. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

15. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம்,
குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.

16. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர்,
சிவகங்கை மாவட்டம்.

17. தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி,
மதுரை மாவட்டம்.

18. தியாகி விஸ்வநாததாஸ் நினைவில்லம், திருமங்கலம்,
மதுரை மாவட்டம்.

19. பரிதிமாற் கலைஞர் நினைவில்லம், மதுரை மாவட்டம்.

20. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் மணிமண்டபம்,
மதுரை மாவட்டம்.

21. பெருந்தலைவர் காமராசர் பிறந்த இல்லம், விருதுநகர்,
விருதுநகர் மாவட்டம்.

22. பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு மணிமண்டபம்,
விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

23. மகாகவி பாரதியார் மணிமண்டபம், எட்டயபுரம்,
தூத்துக்குடி மாவட்டம்.

24. மகாகவி பாரதியார் இல்லம், எட்டயபுரம்,
தூத்துக்குடி மாவட்டம்.

25. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம்,
ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

26. வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம், கட்டாரங்குளம்,
தூத்துக்குடி மாவட்டம்.

27. சுதந்திரப்போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம்,
கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம்.

28. சுதந்திரப்போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம்,
வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம்.

29. உமறுப்புலவர் நினைவகம், எட்டயபுரம்,
தூத்துக்குடி மாவட்டம்.

30. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம்,
திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்.

31. பூலித்தேவன் நினைவு மணிமண்டபம்,
நெற்கட்டும்செவல் கிராமம், திருநெல்வேலி மாவட்டம்.

32. பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம்,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

33. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி,
கன்னியாகுமரி மாவட்டம்.

34. பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம்,
கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்.

35. சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம்,
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

36. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்,
சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

37. முத்து மண்டபம், (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர்
விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்), வேலூர்,
வேலூர் மாவட்டம்.

38. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும்
பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம்,
மெரினா கடற்கரை, காமராசர் சாலை, சென்னை.

39. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் மற்றும்
அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராசர் சாலை,
சென்னை.

40. மகாகவி பாரதியார் நினைவு இல்லம்,
துளசிங்கம் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை.

41. பெருந்தலைவர் காமராசர் நினைவு இல்லம்,
திருமலைச்சாலை, தியாகராயநகர், சென்னை.

42. வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை.

43. காந்தி மண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

44. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

45. மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

46. தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

47. பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

48. பெருந்தலைவர் காமராசர் நினைவகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

49. இரட்டைமலை சீனிவாசன் நினைவகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

50. கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் மணிமண்டபம், (காயிதேமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில்) சென்னை.

**அரங்கங்கள்**

1. இராஜாஜி மண்டபம், ஓமந்தூரரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை.
2. அண்ணா கலை அரங்கம், வேலூர், வேலூர் மாவட்டம்.
3. மகாமகம் கலை அரங்கம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

**நினைவுத்தூண்கள்**

1. ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
2. சுதந்திரப் பொன்விழா நினைவுத்தூண் (போர் நினைவுச் சின்னம் அருகில்), காமராசர் சாலை, சென்னை.
3. குடியரசுப் பொன்விழா நினைவுத்தூண், (காந்தி சிலை அருகில்) காமராசர் சாலை, சென்னை.
4. சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண், வேலூர் மாவட்டம்.
5. பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

**நினைவுப் பூங்கா**

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில்
நினைவுப் பூங்கா, கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்.

**இதரப்பணிகள்**

1. 2007–08ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் "தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டையில், பட்டுக்கோட்டை அழகிரி அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டப்படும்" என அறிவித்திருந்ததைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை அழகிரி அவர்களுக்கு ரூ.39 இலட்சம் செலவில் நினைவகம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் தமிழிசை மூவரான அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவர் ஆகியோருக்கு ரூ.1.51 கோடி செலவில் சிலைகளுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மணிமண்டபம் அமைப்பதற்கான துவக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3. சென்னை, திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள பாரதியார் இல்லத்தில் ரூ.17.73 இலட்சம் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வில்லத்திலுள்ள கூட்ட அரங்கில், கூட்டங்கள் நடத்த மிகக் குறைந்த வாடகையாக நாளொன்றுக்கு ரூ.500/– மட்டும் வசூலிக்கப்படுகிறது.

4. தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில், தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ரூ.40 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மணிமண்டபம் அமைப்பதற்கான துவக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மகிபாலன்பட்டி கிராமத்தில் சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனாருக்கு நினைவுமண்டபம் மற்றும் சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. தமிழுக்குத் தொண்டாற்றி ஒப்பிலக்கணம் தந்த இராபர்ட் கால்டுவெல் வாழ்ந்து மறைந்த திருநெல்வேலி மாவட்டம், இடையன்குடியில் உள்ள அவரது இல்லத்தை நினைவு இல்லமாக மாற்றிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் அவரது மார்பளவு உருவச்சிலை நிறுவப்படவுள்ளது. மேலும் ரூ.18.50 இலட்சம் செலவில் புனரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

7. எல்லைப் போராட்ட வீரர் ம.பொ.சி. அவர்களின் திருவுருவச்சிலை சென்னை திருவல்லிக்கேணியில், அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோவில் தெற்குத் தோரணவாயில் எதிரே, டாக்டர் பெசன்ட் சாலை – இருசப்பன் தெரு – கஜபதி லாலா தெரு சந்திப்பில் என்.கே.டி. மகளிர் பள்ளியின் சுற்றுச் சுவரையொட்டி ரூ.6.25 இலட்சம் செலவில் நிறுவப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8. வீரத்தியாகி வாஞ்சிநாதன் பிறந்த செங்கோட்டையில் அவருக்கு மணிமண்டபம் நிறுவப்படும்.

9. நாட்டு விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த கோபால் நாயக்கரின் நினைவாக விருப்பாட்சியில் மணிமண்டபம் நிறுவப்படும்.

10. அருந்ததிய சமுதாயத்தினைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரனுக்கு, அவரது நினைவைப் போற்றும் வகையில் தக்கதோர் நினைவுச் சின்னம் நெல்லைச் சீமையில் எழுப்பப்படும்.

11. 1947ஆம் ஆண்டிலிருந்து 1949 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவரது சொந்த ஊரான விழுப்புரம் மாவட்டம், ஓமந்தூரில் அன்னாருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும்.

12. அனைவருக்கும் பயன்படக் கூடிய வகையில், சுமார் 1,500 பேர் அமரக் கூடிய அளவில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நவீன கூட்ட அரங்கமாக ரூ.50 கோடி செலவில் கலைவாணர் அரங்கம் மீண்டும் கட்டப்படும்.

## அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட, தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது தியாகங்களையும், அருமை பெருமைகளையும் நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் நோக்கோடு, அவர்களது பிறந்தநாள் விழாக்களும், உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவுநாள் நிகழ்ச்சிகள் ஆகியவைகளும் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. அன்றைய தினத்தில், அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அருகில் திருவுருவப்படத்தினை வைத்து, மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களால் அரசின் சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

சென்னையிலுள்ள தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு, அவர்களின் பிறந்தநாட்கள் மற்றும் நினைவு நாளின்போது, பின்வருமாறு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்து, திருவுருவச் சிலைகளுக்கு அருகில் திருவுருவப் படத்தினை வைத்து மலர் தூவி மரியாதை செய்யப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | ஏப்ரல் 14 | அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழா |
| 2. | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்தநாள் விழா |
| 3. | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்தநாள் விழா |
| 4. | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா |
| 5. | ஏப்ரல் (அ) மே | தமிழர் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி விழா சித்திரை முழு நிலவு நாள் |
| 6. | ஜுன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் பிறந்த நாள் விழா |
| 7. | ஜுன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்தநாள் விழா |
| 8. | ஜுலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா |
| 9. | ஜுலை 17 | தியாகிகள் தினம்– தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 10. | ஜுலை 17 | தியாகிகள் தினம் – தியாகி சங்கரலிங்கனார் |
| 11. | ஜுலை 17 | தியாகிகள் தினம் – தியாகி செண்பகராமன் |
| 12. | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழா |
| 13. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா |
| 14. | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்தநாள் விழா |
| 15. | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்தநாள் விழா |

| | | |
|---|---|---|
| 16. | அக்டோபர் 2 | உத்தமர் காந்தியடிகள் பிறந்தநாள் விழா |
| 17. | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழா |
| 18. | நவம்பர் 8 | இத்தாலிய தமிழ் அறிஞர் வீரமாமுனிவர் பிறந்தநாள் விழா |
| 19. | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்தநாள் விழா |
| 20. | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்தநாள் விழா விழா |
| 21. | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்தநாள் விழா |
| 22. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா |
| 23. | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழா |
| 24. | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள் விழா |
| 25. | ஜனவரி 30 | உத்தமர் காந்தியடிகள் நினைவு நாள் |

**மாவட்டங்களில் நடைபெறும் அரசு விழாக்கள்**

| மாவட்டம் | நடைபெறும் அரசு விழா மற்றும் இடம் |
|---|---|
| தூத்துக்குடி மாவட்டம் | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்தநாள் விழா, கோவில்பட்டி |
| | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தநாள் விழா, பாஞ்சாலங்குறிச்சி |
| | வீரன் சுந்தரலிங்கம் பிறந்தநாள் விழா, கவர்னகிரி |
| | மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா, எட்டயபுரம் |
| தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்தநாள் விழா |
| இராமநாதபுரம் மாவட்டம் | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்தநாள் விழா, இராமநாதபுரம் |
| ஈரோடு மாவட்டம் | தீரன் சின்னமலை பிறந்தநாள் விழா, ஓடாநிலை, அரச்சலூர் |

| | |
|---|---|
| நாமக்கல் மாவட்டம் | வல்வில் ஓரி விழா,<br>கொல்லி மலை |
| சென்னை மற்றும்<br>அனைத்து மாவட்டங்கள் | உத்தமர் காந்தியடிகள்<br>பிறந்தநாள் விழா |
| மதுரை மற்றும்<br>இராமநாதபுரம் மாவட்டங்கள் | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்<br>பிறந்தநாள் விழா |
| கிருஷ்ணகிரி மாவட்டம் | மூதறிஞர் இராஜாஜி<br>பிறந்தநாள் விழா, தொரப்பள்ளி |
| கன்னியாகுமரி மாவட்டம் | சதாவதானி செய்குதம்பி<br>பாவலர் பிறந்தநாள் விழா,<br>நாகர்கோவில் |
| சிவகங்கை மாவட்டம் | மருது பாண்டியர் நினைவு நாள்,<br>திருப்பத்தூர் |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் | முத்தரையர் மன்னர் பேரரசர்<br>பெரும்பிடுகு பிறந்தநாள் விழா,<br>திருச்சிராப்பள்ளி |

## செய்தி மக்கள் தொடர்புத் துறையால் கொண்டாடப்பட்ட சிறப்பு விழாக்கள்

1. பெங்களூருவில் பல ஆண்டுகளாக நிறுவ முடியாமல் இருந்த அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பெருமுயற்சியின் பயனாக நிறுவப்பட்டு, **9.8.2009** அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு.பி.எஸ். எடியூரப்பா அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. திராவிட மொழிகளின் மும்மூர்த்திகள் எனக் கருதப்படுபவர்கள் தமிழில் அய்யன் திருவள்ளுவர், தெலுங்கில் வேமண்ணா மற்றும் கன்னடத்தில் சர்வக்ஞர். கன்னட இலக்கியத்தில் மானுடத்தைப் பாடிய, வானம்பாடியாகத் திகழ்ந்த கன்னடக் கவிஞர் சர்வக்ஞரின் திருவுருவச் சிலை, சென்னை, அயனாவரம் ஜீவா பூங்காவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு.பி.எஸ். எடியூரப்பா அவர்களால் **13.8.2009** அன்று திறந்து வைக்கப்பட்டது.

2. பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினை **15.9.2008** முதல் **15.9.2009** வரை ஓராண்டு சிறப்பாகக் கொண்டாடிட அரசு ஆணையிட்டது. இவ்விழாவினைச் சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாகக் கொண்டாடும் போது பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென அரசு ஆணையிட்டதின்பேரில், கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் ஏழை, எளியோருக்கு

வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மரக்கன்றுகள் பெருமளவில் நடப்பட்டன. புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. புதிதாகக் கட்டப்பட்ட அரசுக் கட்டடங்களுக்கு அண்ணா நூற்றாண்டு நினைவுக் கட்டடம் எனப் பெயரிடப்பட்டன.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா 15.9.2009 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாச் சிறப்பு மலரை வெளியிட்டார். மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. பிராணாப் முகர்ஜி அவர்கள் பேரறிஞர் அண்ணா உருவம் பொறித்த ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டார். அண்ணா நூறு (http://anna100.tn.gov.in/) என்ற இணைய தளத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். “அண்ணாவின் பொன்மொழிகள்” என்ற நூல் வெளியிடப்பட்டது.

3. மாண்புமிகு மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தியாக சீலர் கக்கன் அவர்களின் நூற்றாண்டு விழா மதுரை மாவட்டம் தும்பைப்பட்டியில் 10.10.2009 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. தியாக சீலர் கக்கன் அவர்களின் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பெற்று அன்னாரது குடும்பத்தினர் அரசின் சார்பில் சிறப்பிக்கப்பட்டனர்.

4. சென்னை வள்ளுவர்கோட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் 15.01.2010 அன்று திருவள்ளுவர் திருநாள் மற்றும் அறிஞர் பெருமக்களுக்கு விருதுகள் வழங்கும் விழா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் 30.3.2010 அன்று, சென்னையில், ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் திருவுருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அஞ்சல் தலையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

6. தமிழ்த் திரையுலகின் அரும்பெரும் சாதனையாளரும், ஏழிசை மன்னருமான எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களின் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு (2010) சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

## விளம்பரம்

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சமூகநலப் பணிகள், கொள்கைகள், சாதனைகள் மற்றும் பிற துறைகளின் வளர்ச்சிப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஆகியவற்றை மக்கள் அறிந்துகொள்ளச் செய்யும் வகையில், செய்தித்தாள்களில் விளம்பரங்களை இத்துறை வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் விளம்பரங்களை நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக இத்துறை செயலாற்றி வருகிறது. விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அரசின் நலத் திட்டங்களான :

1) பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்.

2) கலைஞர் காப்பீட்டுத் திட்டம்.

3) 108 – ஆம்புலன்ஸ் திட்டம்.

4) கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.

5) சட்டமன்றப் பேரவை வளாகத் திறப்பு விழா.

6) உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை.

7) பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழா.

8) நியாய விலைக் கடைகளில் 50 ரூபாய்க்கு “மலிவு விலையில் மளிகைப் பொருட்கள்” வழங்கும் திட்டம்.

9) தமிழர் திருநாளை முன்னிட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டது.

10) தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளை முன்னிட்டு, அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாக பொங்கல் பொருட்கள் வழங்கப்பட்டது.

11) பல்வேறு மேம்பாலங்களின் திறப்பு விழாக்கள்.

12) நாட்டுக்கு உழைத்த தலைவர்கள் மற்றும் தமிழறிஞர்களின் பிறந்தநாள் விழாக்கள்.

13) திரைப்பட விருதுகள் மற்றும் கலைமாமணி விருதுகள் வழங்கும் விழாக்கள்.

14) மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் பல்வேறு வழித்தடங்களுக்கு புதிய பேருந்துகள் இயக்கி வைக்கப்பட்டது.

15) விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி–மருத்துவமனை திறப்பு விழா.

16) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளும் அனைத்து அரசு விழாக்கள்.

17) முக்கிய இனங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கைகள்.

போன்ற பல்வேறு விளம்பரங்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைந்து, அரசு நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் முன்னணி நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. உள்நாட்டு, அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து அவர்களின் வருகையை அதிகரிக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இத்தகைய, தமிழ்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்புகளை வெளிப்படுத்தும் விளம்பரங்கள் அயல்நாட்டு நேரடி மூலதனத்தையும், பிற மாநிலங்களின் தொழில்முனைவோர்களிடமிருந்து புதிய கூடுதலான மூலதனத்தையும் ஈர்க்க வகை செய்துள்ளது.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்டுத்தி கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள், மத்திய அரசின் தேசிய தகவல் மையத்தின் வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுவதுடன், www.tender.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இலவசமாகப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன், இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசின் விளம்பரங்கள் வெளியிடுதல் தொடர்பான அரசாணையினை பின்பற்றி பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள், பத்திரிகைகளில் இப்பிரிவால் வெளியிடப்பட்டு வருகிறது.

**கட்டுமானப் பணிகள்**

| வ. எண். | பணி மதிப்பீடு | விளம்பரம் வெளியிட வேண்டிய நாளிதழ்கள் (ம) பதிப்புகள் |
|---|---|---|
| 1. | ரூ.25 இலட்சம் முதல் ரூ.1 கோடி வரை | இரு தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் (மாவட்ட அளவிலான பதிப்பு மட்டும்) |
| 2. | ரூ.1 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை | இரு தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் (தமிழ்நாடு அனைத்துப் பதிப்புகளிலும்) |
| 3. | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.50 கோடி வரை | ஒரு ஆங்கில நாளிதழ் (அனைத்திந்திய பதிப்பு) மற்றும் ஒரு தமிழ் நாளிதழில் விளம்பரம் (தமிழ்நாடு அனைத்துப் பதிப்புகளிலும்) |

| | |
|---|---|
| 4.ரூ.50 கோடிக்கு மேல் | இரு ஆங்கில நாளிதழ்கள் (அதில் ஒன்று வணிக நாளிதழ்) அனைத்திந்திய பதிப்பு மற்றும் ஒரு தமிழ் நாளிதழ் (தமிழ்நாடு அனைத்துப் பதிப்பு மற்றும் இந்திய வர்த்தக இதழ்) (Indian Trade Journal) விளம்பரம் |

**கொள்முதல்கள்**

| வ. எண். | கொள்முதல் மதிப்பீடு | விளம்பரம் வெளியிட வேண்டிய நாளிதழ்கள் (ம) பதிப்புகள் |
|---|---|---|
| 1. | ரூ.10 இலட்சம் முதல் ரூ.50 இலட்சம் வரை | இரு தமிழ் நாளிதழ்களில் (தமிழ்நாடு அனைத்துப் பதிப்பு) விளம்பரம் |
| 2. | ரூ.50 இலட்சம் முதல் ரூ.50 கோடி வரை | ஒரு ஆங்கில நாளிதழ் (அனைத்திந்திய பதிப்பு) மற்றும் ஒரு தமிழ் நாளிதழில் (தமிழ்நாடு அனைத்துப் பதிப்புகளிலும்) விளம்பரம் |
| 3. | ரூ.50 கோடிக்கு மேல் | இரு ஆங்கில நாளிதழ்கள் (அதில் ஒன்று வணிக நாளிதழ்) அனைத்திந்திய பதிப்பு, ஒரு தமிழ் நாளிதழ் (தமிழ்நாடு அனைத்துப் பதிப்பு) மற்றும் இந்திய வர்த்தக இதழில் (Indian Trade Journal) விளம்பரம் |

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் அதனைத் தொடர்ந்து இயற்றப்பட்ட தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000–ன்படி அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன. மேலும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் தமிழ்நாடு அரசின் www.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றது.

ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.1 கோடி வரையிலான பணிகளின் மதிப்பு பற்றிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும், ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.1 கோடிக்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள், திரைப்பட மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

தமிழ்த் திரையுலகை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் 1968–ஆம் ஆண்டு முதல் திரைப்பட விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோர்களைத் தேர்வு செய்வதற்கென தேர்வுக்குழு ஒன்று அரசினால் ஆண்டுதோறும் அமைக்கப்படுகிறது.

இக்குழுவால் தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பின்வருமாறு விருதுகள் வழங்கப்படுகின்றன.

| | பரிசு விவரம் | பரிசுத் தொகை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
|---|---|---|
| 1. | முதல் பரிசு | ரூ.2 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 2. | இரண்டாம் பரிசு | ரூ.1 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 3. | மூன்றாம் பரிசு | ரூ.75 ஆயிரத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறப்புப் பரிசு | ரூ.75 ஆயிரத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் |

பெண்களைப் பற்றி உயர்வாக சித்திரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன. அதுபோன்றே அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற சிறந்த திரைப்படத்திற்கு ரூ.50 ஆயிரம், ரூ.25 ஆயிரம் மற்றும் ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

2000–ஆம் ஆண்டிலிருந்து விருது பெறும் கலைஞர்களில் ஆண் மற்றும் பெண் குரல்வளக் (Dubbing) கலைஞர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகை ஆகியோருக்கான விருதுகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு 2001–ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன.

**கலைத்துறை வித்தகர் விருதுகள்**

தமிழ்த் திரையுலக வரலாற்றில் நீங்காத இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், ராஜா சாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரின் பெயர்களில் கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

**அரசு திரைப்பட மானியம்**

குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக்குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.7 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**சின்னத்திரை விருதுகள்**

முதன் முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2006—ஆம் ஆண்டு முதல் சின்னத்திரைக் கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசு ரூ.2 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும், சிறந்த நெடுந்தொடருக்கு இரண்டாம் பரிசு ரூ.1 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும், சிறந்த வாரத் தொடர் ஒன்றிற்கு ரூ.1 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது. மேலும் சிறந்த கதை ஆசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்), சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்), சிறந்த தந்திரக் காட்சியாளர் ஆகியோருக்குத் தலா 3 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

ஆண்டின் சிறந்த சாதனையாளர், ஆண்டின் சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோருக்குத் தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மேலும், 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளுக்கு சின்னத்திரை விருதுகள் வழங்கிட மாண்புமிகு நீதியரசர் மு. மருதமுத்து அவர்களைத் தலைவராகக் கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வுக்குழு, சின்னத்திரைத் தொடர்களைப் பார்வையிட்டு வருகிறது.

**திரைப்பட விருதுகள் வழங்கும் விழா**

தமிழக அரசின் சார்பில் 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 8.12.2009 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சிறந்த திரைப்படங்கள், நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தங்கப்பதக்கம், ரொக்கப்பரிசு, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசினை வழங்கினார்கள். இவ்விழாவில் எம்.ஜி.ஆர். அரசு

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

**தமிழ்த் திரைப்படத் துறையினருக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகள்**

- சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு, ரொக்கப்பரிசு, நினைவுப்பரிசு மற்றும் தங்கப்பதக்கம், சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.
- திரையுலகில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களுக்கு கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.
- திரைப்படக் கலைஞர்களுக்கு வழங்குவதைப் போல, கடந்த 2006–ஆம் ஆண்டு முதல் சின்னத்திரைக் கலைஞர்களுக்கும் காசோலை, தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.
- குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.7 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.
- திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- சண்டைக்காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு
ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.
- அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அனுமதி வழங்கப்படுகிறது.
- திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணங்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் பெறும் தமிழ்த் திரைப்படங்களுக்கு அந்த விருதுகள் பெற்றமைக்காக, தமிழ்நாடு அரசு, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- இனமுரசு சத்யராஜ் நடித்த “பெரியார்” திரைப்படத்திற்கு ரூ.95 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.
- திரையுலகை மேம்படுத்தவும் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தவும் சென்னையில் நடந்த பன்ஊடக மாநாட்டிற்காக இந்திய வர்த்தக இணையத்திற்கு (Federation of Indian Chambers of Commerce and Industry) ரூ.50 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.

- திரைப்படத்துறைக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை மறு ஆய்வு செய்ய சீரமைப்புக்குழு அமைத்து அரசாணை (நிலை) எண். 374, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ.1)த்துறை, நாள். 05.06.09இல் வெளியிடப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க திரைப்படத்துறையினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.
- மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க காஞ்சிபுரம் மாவட்டம் – செங்கல்பட்டு வட்டம் பையனூர் கிராமத்தில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம் மற்றும் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அடுக்கு மாடி வீடுகள் கட்டும் பொருட்டு, 94 ஏக்கர் பரப்புள்ள நிலம், நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- சின்னத்திரைக் கலைஞர்களுக்கு ரூ.1 கோடி அனுமதித்து நலநிதியம் அமைக்கப்பட்டுள்ளது.
- திரைப்படப் படப்பிடிப்புக் கட்டணங்களில் 50% சலுகை அடிப்படையில் சின்னத்திரை படப்பிடிப்புக் கட்டணமாக அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தமிழில் தலைப்பு**

தமிழ்மொழி ஆர்வத்திற்கு மென்மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில், வெளியிடப்படும் புதிய திரைப்படங்களுக்குத் தமிழிலேயே பெயர் சூட்டப்படுமானால், அந்தத் திரைப்படங்களுக்கு 22.07.2006 முதல் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்து, வணிக வரித்துறையினரால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**சீரமைப்புக்குழு**

2009–10ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவித்தவாறு, திரைப்படத்துறைக்கு உதவும் வகையில் வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணத்தை குறைத்ததோடு, தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளித்தும், இவற்றின் பயன் பொதுமக்களுக்குச் சென்றடையாத நிலை தொடர்வதால் இச்சலுகைகளை மறு ஆய்வு செய்ய திரைப்படங்கள், திரையரங்குகள், கேளிக்கை வரி விதிப்பு, வெளிப்புறப் படப்பிடிப்புக் கட்டணங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகளைக் களைய திரைப்படத்துறையினர், உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்து பேசி விவாதித்து அரசுக்குப் பரிந்துரை அளிக்க சீரமைப்புக் குழு ஒன்றை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

**நலநிதியம்**

அண்மைக் காலங்களில், பொதுமக்களின் மனதில் பெரிய இடத்தைப் பெற்று வளர்ந்து வரும் சின்னத்திரையில் பணிபுரிவோருக்கு, மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி கிடைக்கச் செய்ய சின்னத்திரைக் கலைஞர்கள் நலநிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியத்தின் மூலம் அவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு ஏதுவாக, இந்நிதியத்திற்கு அரசு ரூ.1 கோடி வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**திரைப்படத் துறையினர் நல வாரியம்**

தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகவும், சின்னத்திரை கலைஞர்களின் நலன்களுக்காகவும் சேர்த்து ‘திரைப்படத் துறையினர் நல வாரியம்’ உருவாக்கிட மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட நல வாரியக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது உறுப்பினர்கள் சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

**திரைப்படப் படப்பிடிப்புக் கட்டணம்**

தமிழ்நாட்டில் திரைப்படப் படப்பிடிப்பு நடத்தப்படுவதை ஊக்குவிக்கின்ற வகையிலும், நலிந்து வருகின்ற திரைப்படத் தொழிலுக்கு உதவுகின்ற வகையிலும் பொது இடங்களில் படப்பிடிப்புகள் நடத்துவதற்கான கட்டண விகிதங்கள் வெகுவாக இவ்வரசினால் குறைக்கப்பட்டுள்ளது.

படப்பிடிப்பு நடத்த இராஜாஜி மண்டபத்திற்கு கட்டணம் ரூ.25,000 என இருந்ததை ரூ.10,000ஆக இவ்வரசினால் குறைக்கப்பட்டது. மேலும் வரலாற்றுச் சின்னங்கள், வள்ளுவர் கோட்டம், பள்ளி, கல்லூரிகள், பூங்கா, வனவிலங்குகள் சரணாலயம், மலைவாழ் இடங்கள் போன்ற இடங்களுக்கு ரூ.10,000லிருந்து ரூ.5,000ஆகவும், கடற்கரைகள், பொது இடங்கள், சாலைகள் போன்ற இடங்களுக்கு ரூ.5,000லிருந்து ரூ.3,000ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு முதல் பொது இடங்களில் திரைப்படப் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர்த் திங்கள் வரை | வழங்கிய படப்பிடிப்பு அனுமதி (சின்னத்திரைப் படப்பிடிப்பு உட்பட) |
|---|---|
| 2006 | 900 |
| 2007 | 914 |
| 2008 | 980 |
| 2009 | 997 |

## தமிழ்நாடு திரைப்படப்பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 1968 ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டு, திரைப்படம் மற்றும் வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் அரசின் நலத்திட்டங்களை மக்கள் அறியச் செய்யும்வண்ணம் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிறப்பாகச் செயல்படுகிறது. தமிழக அரசுத் துறைகள் மற்றும் அரசு சார் நிறுவனங்களின் விளம்பரப்படங்கள் மற்றும் கருத்து விளக்கப்படங்களைத் தயாரிக்கும் முகமையாகவும் திரைப்படப்பிரிவு செயல்படுகிறது.

**செய்திப் படப்பிடிப்பு**

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு, தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளையும், முக்கியமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் வீடியோவில் படமெடுக்கப்படுகின்றன.

**35 மி.மீ.இல் செய்தி மலர் / கருத்து விளக்கப்படத் தயாரிப்பு**

செய்தி மலர் படப்பிடிப்புகளை 10 நிமிடப் படமாகத் தொகுத்து அதை 147 பிரதிகள் எடுத்து மத்திய அரசு திரைப்படப்பிரிவின் மூலமாக சென்னை மற்றும் மதுரைக் கிளைகளின் உதவியுடன் தமிழகத்திலுள்ள 1,410 திரையரங்குகளில் வெளியிடப்படுகிறது. தமிழ்நாடு திரைப்படப்பிரிவு இதுவரை 419 படச்சுருள் செய்தி மலர்கள் மற்றும் கருத்து விளக்கப்படங்களைத் தயாரித்துள்ளது.

**வீடியோ செய்தி மலர் தயாரிப்பு**

தமிழ்நாடு திரைப்படப்பிரிவு இந்த ஆண்டில் முக்கியமான மக்கள் நலத் திட்டங்கள் அடங்கிய 10 வீடியோ செய்தி மலர்களைத் தயாரித்துள்ளது. இதனை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் கள விளம்பரம் செய்ய குறுந்தகட்டில் நகல் எடுத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 10 குறுந்தகடுகள் வீதம் அனுப்பப்பட்டு வருகிறது.

**பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா**

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, 15.09.2009 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற போது, தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட ‘‘எதையும் தாங்கும் இதயம்’’ என்ற வீடியோ குறும்படம் மற்றும் ‘‘அண்ணா அண்ணா’’ என்ற பாடல் திரையிடப்பட்டு அனைவரது பாராட்டையும் பெற்றது.

## எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்

இந்நிறுவனம், முதன் முதலாக 1945–இல் அரசு மைய தொழில்நுட்பக் கல்லூரியின் ஒரு அங்கமாக தொடங்கப்பட்டது. 1960–ஆம் வருடம், இந்நிறுவனம் ‘‘தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்’’ எனும் சிறப்பு நிறுவனமாக நிலை உயர்த்தப்பட்டது. திரைப்பட தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (Institute of Film Technology) என்ற பெயரில் 06.11.1964 முதல் சென்னை தரமணியில் உள்ள அரசு மைய தொழில்நுட்ப கல்வி வளாகத்தில் செயல்படத் துவங்கியது. இந்நிறுவனம், திரைப்படத் தயாரிப்பு தொழில்நுட்ப கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் ஏழை எளிய மாணவர்களுக்குக் கற்றுத் தருவதாகும்.

இந்தியாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி தரும் மூன்று நிறுவனங்களில், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும். இந்நிறுவனம், தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. மற்ற இரண்டு நிறுவனங்கள் பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்யஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனமும் ஆகும்.

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லா பட்டயப் படிப்புகளுக்கும் புதுடில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. அதற்கான மாணவ/மாணவியர் சேர்க்கைக்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி மற்ற விவரங்கள் பின்வருமாறு :

**இயக்குதல் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு.

**ஒளிப்பதிவு**

இயற்பியல் மற்றும் வேதியியல் பாடங்களில் பிளஸ்–2 தேர்வில் தேர்ச்சி அல்லது மேற்குறிப்பிட்ட தகுதிகள் உடைய இணையான வேறு படிப்புப் பிரிவு அல்லது நிழற்படப்பிடிப்பினை சிறப்புப் பாடமாகக் கொண்ட வாழ்க்கைத் தொழிற் படிப்புப் பிரிவு அல்லது அதற்கு இணையான மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் பட்டயப் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் பொறியியல் பட்டயப் படிப்பில் தேர்ச்சி.

**படம் பதனிடுதல்**

இயற்பியல் மற்றும் வேதியியல் பாடங்களில் பிளஸ்–2 தேர்வில் தேர்ச்சி அல்லது மேற்குறிப்பிட்ட தகுதிகள் உடைய இணையான வேறு படிப்புப் பிரிவு அல்லது நிழற்படப்பிடிப்பினை சிறப்புப் பாடமாகக் கொண்ட வாழ்க்கைத் தொழிற் படிப்புப் பிரிவு அல்லது அதற்கு இணையான மின்னியல்

மற்றும் மின்னணுவியல் பொறியியல் பட்டயப் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் பொறியியல் பட்டயப் படிப்பில் தேர்ச்சி.

**ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல்**

இயற்பியல் மற்றும் வேதியியல் பாடங்களில் பிளஸ்–2 தேர்வில் தேர்ச்சி. அல்லது மேற்குறிப்பிட்ட தகுதிகள் உடைய இணையான வேறு படிப்புப் பிரிவு அல்லது வானொலி மற்றும் தொலைக்காட்சி அல்லது வீட்டு உபயோக மின்னணு சாதனங்கள் பற்றி சிறப்புப் பாடம் கொண்ட வாழ்க்கைத் தொழிற் படிப்புப் பிரிவு அல்லது அதற்கு இணையான மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் பட்டயப் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் பொறியியல் பட்டயப் படிப்பில் தேர்ச்சி.

**படத்தொகுப்பு**

பிளஸ்–2 தேர்வில் எதாவது ஒரு பாடப் பிரிவில் தேர்ச்சி.

மேற்குறிப்பிட்டப் பாடப்பிரிவுகள் மூன்று ஆண்டு காலம் பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 12 மாணவர்களும், ஒரு மாணவர் பிற மாநிலத்திலிருந்தும், ஒரு மாணவர் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சம்மேளனத் தலைவர் பரிந்துரையின் பேரிலும் ஆக மொத்தம் ஒவ்வொரு பிரிவிலும் 14 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

கல்விக் கட்டணமாக ரூ.10,000/–, சிறப்புக் கட்டணமாக ரூ.1,500/–, வளர்ச்சிக் கட்டணமாக ரூ1,000/– வசூலிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் சேர்க்கை பற்றிய விவரம் பிரதான தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகளில் விளம்பரம் வெளியிடப்பட்டு, கல்வியாண்டில் ஜுலை மாதத்தில் மாணவர்களின் சேர்க்கை நடைபெறுகின்றது. இதற்காக தமிழ்நாடு இணைய தளத்திலும் மாணவர்கள் சேர்க்கைக்கான அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இறுதி ஆண்டில், அனைத்து துறைகளில் பயிலும் மாணவர்களையும் ஒன்று சேர்த்து 14 குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், தமிழக அரசு ஆண்டுதோறும் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக சுமாராக ரூ.14 இலட்சம் நிதியுதவி அளித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு “எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் விருது“ என்ற பெயரில், இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் பட்டயக் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்கு தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம் மற்றும் ரூ.5000/– காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ், தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கி வருகிறது.

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்து கொள்ள அனுப்பும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.75,000/– தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த 7 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்நிறுவன இயக்குதல் பிரிவு மாணவர் திரு. எஸ். முரளிமனோகர் இயக்கிய ''கர்ணமோட்சம்'' என்ற குறும்படம் இந்திய அளவில் 2007–2008–ஆம் கல்வியாண்டிற்கான சிறந்த குறும்படமாக மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு, அதற்குரிய விருதினை அம்மாணவரும், அதன் தயாரிப்பாளர் என்ற முறையில் நிறுவனத்தின் பொறுப்பிலிருந்த, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களும் 19.03.2010 அன்று புதுடில்லியில் மேதகு குடியரசு தலைவர் அவர்களிடமிருந்து பெற்றார்கள்.

## திரைப்படம், வீடியோ மற்றும்
## கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டில் திரைப்படத் தொழில் பல ஆயிரக்கணக்கான கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலைவாய்ப்பளிக்கும் முக்கியத் தொழிலாக விளங்குகிறது. இத்தொழிலின் முக்கியத்துவம் கருதி, இத்தொழில் சார்ந்த பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சலுகைகளை அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வகையிலான மொத்தம் 1,257 திரையரங்குகள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | : | 1,123 |
| 2. | ஓரளவு நிரந்தரத் திரையரங்குகள் | : | 63 |
| 3. | நிரந்தரமற்ற திரையரங்குகள் | : | 63 |
| 4. | திறந்த வெளித் திரையரங்குகள் | : | 8 |
| | **மொத்தம்** | **:** | **1,257** |

**1955**ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட **1957** ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், திரையங்குகளில் திரைப்படம் காண வருகின்ற பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டட நிலைப்புத் தன்மை, முறையான பராமரிப்பு ஆகியவற்றிக்கு வகை செய்கின்றன.

**கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு:**

**1995**ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு (முறைப்படுத்துதல்) சட்டம் இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பினை முறைப் படுத்துகிறது. 2000ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் (சட்டம் 36/2000)–படி மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள் உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் சென்னை காவல்துறை ஆணையாளர் ஆகியோர், இச்சட்டத்தின் 3,5,6 அல்லது 8 ஆகிய பிரிவுகளை மீறும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசு, 09.01.2004ஆம் நாளிட்ட அதன் அறிவிக்கையின் மூலம், கேபிள் தொலைக்காட்சி சேவையை இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திடம் (TRAI) ஒப்படைத்துள்ளது.

**வீடியோ சட்டமும் விதிகளும்:**

1984ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும், கம்பிவடத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி, திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை

செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாக செயல்படுகின்றனர். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

**திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு :**

தமிழ்நாடு புலானாய்வுத்துறை குற்றப்பிரிவில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு சென்னை காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. பதிப்புரிமைச் சட்டம், 2000ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும், இப்பிரிவு ஆற்றும் பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பன்னிரெண்டு திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. வீடியோ தடுப்புப் பிரிவினால் 2004–ஆம் ஆண்டு முதல் 2010–ஆம் ஆண்டு வரை (28.02.2010 வரை) பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப் பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாயில்) | கம்பிவடத் தொலைக்காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2004 | 1,151 | 1,206 | 12,06,43,647/- | 53 |
| 2005 | 813 | 950 | 9,44,55,557/- | 13 |
| 2006 | 1,153 | 1,193 | 19,00,04,502/- | 10 |
| 2007 | 1,844 | 1,866 | 17,38,74,360/- | 09 |
| 2008 | 1,968 | 1,955 | 1,72,23,401/- | 17 |
| 2009 | 2,204 | 2,201 | 8,32,59,759/- | 31 |
| 2010 (28.02.10 வரை) | 474 | 473 | 2,21,84,090/- | 10 |

தற்போது தமிழக திரைப்படத்துறை காணொளித் திருட்டுச் செயல்களினால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. அதன் விளைவாக திரையிடப்படுவதற்கு முன்னரே படத்தின் நகல்கள் சட்டத்திற்கு புறம்பாக வெளிக்கொணரப்பட்டு உள் மற்றும் வெளிநாடுகளில் விநியோகிக்கப்பட்டுள்ளன. அண்மையில் தமிழகத்தில் ஒரு காணொளித் திருட்டின் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதில் திரைக்கு வராத ஒரு திரைப்படத்தின் உரிமம் பெறாத நகல்கள் பெரிய அளவில் விநியோகம் செய்யப்படுவதற்காக இருந்த நேர்வில் உடனடி நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் இக்குற்றத்திற்கு உடந்தையானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எனவே, காணொளித் திருட்டின் குற்றங்களை நிர்வாகிக்கும் சட்டங்கள் கடுமையாகக்கப்படல் வேண்டும் என்பது உணரப்பட்டுள்ளது.

காணொளித் திருட்டின் குற்றச் செயல்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு 1957ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின் வகைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. 1957-ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின் 63-ஆம் பிரிவின்படி தண்டிக்கத்தக்க குற்ற செயல் ஒன்றுக்காக குற்ற வழக்குகளை குற்றவியல் அதிகார அமைப்புகள் தொடர்கின்றன. மேற்சொன்ன சட்டத்தின் 63-ஆம் பிரிவின்படி, குறைந்த அளவு தண்டனையாக 6 மாதங்களுக்குள் குறையாத கால அளவு ஒன்றுக்கான சிறை தண்டனையும் ரூ.50,000/- க்கு குறையாத பணத்தண்டனையும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அதன் கீழ் வரும் வகைமுறையின்படி, பதிப்புரிமையை மீறுவதானது வாணிபம் அல்லது வணிகத்தின் போக்கில் பயனுக்காக செய்யப்பட்டிருக்காதவிடத்து, நீதிமன்றமானது 6 மாதத்திற்கு குறைந்ததொரு கால அளவிற்குச் சிறை தண்டனையையோ அல்லது ரூ.50,000/-க்கு குறைவான பணத்தண்டனையையோ விதிக்கலாம். இந்த வகைமுறையானது, அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. அதன் விளைவாக தண்டனையாக சிறியதொகைகள் பணத்தண்டனையாக விதிக்கப்படுகின்றன. இத்தகைய சட்ட முரணான செயல்களில் ஈடுபடுகின்ற இந்நபர்கள் தண்டனைக்கான பயம் ஏதுமின்றித் துணிந்து அச்செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

எனவே, தகுதிவாய்ந்த அதிகார எல்லையைக் கொண்ட நீதிமன்றத்தால் குறைந்த அளவு கால அளவிற்குச் சிறைத் தண்டனை மற்றும் பணத்தண்டனை விதிப்பதற்கு இயல்விக்கும் வகையில் அதன் கீழ்வரும் வகைமுறையை விட்டுவிடும் வகையிலும், காணொளித் திருட்டின் குற்றத்தை திறனுள்ள வகையில் கட்டுப்படுத்தும் பொருட்டும், குறைந்த கால அளவு ஆறுமாத சிறைத்தண்டனையை ஓராண்டாக உயர்த்துவதற்கும், 1957-ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தில் 63, 63A ஆகிய பிரிவுகளை திருத்துவதற்கான வேண்டுகோளுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 13.01.2010 அன்று இந்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள்.

## தமிழரசு

தமிழ்நாடு அரசின் திட்டங்கள், மக்கள் நலப்பணிகள், நலத்திட்டச் செயல்பாடுகள், சாதனைகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு செல்லும் அரிய பணியை 'தமிழரசு' இதழ் செய்துவருகிறது.

பயனுள்ள பல தகவல்களை வாசகர்களும், பொதுமக்களும் தமிழரசு இதழ் மூலமாகப் பெற்று வருகிறார்கள். மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைத் தொகுப்புகள், அறிவிப்புகள், தமிழக அரசின் சாதனைகள், தமிழக அரசின் திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள், தமிழக அரசால் மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த கட்டுரைகள் மற்றும் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள் மற்றும் வெற்றிக் கதைகள், மக்களுக்குப் பயன்படும் முக்கிய அரசாணைகள் உள்ளிட்டவை வெளியிடப்படுகின்றன. மேலும், மகளிர் நலம் மற்றும் சமூக நலம் சார்ந்த திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், இலக்கியச் சிந்தனைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியனவும் தமிழரசு இதழில் இடம்பெறுகின்றன.

தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல், சிறப்பு வெளியீடுகள், மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றையும் அழகு மிளிர வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் சிறப்புற அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி, மக்கள் தொடர்புத்துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் அச்சிடப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் அறிவிப்புகள் மற்றும் நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆக்கப்பணிகளை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், செய்திகள் தொகுத்து வடிவமைக்கப்பட்டு, 'அரசுச் செய்தி' சுவரொட்டி அரசு மைய அச்சகத்தின் மூலம் டிசம்பர் 2009 வரையிலும், தமிழரசு அச்சகத்தின் மூலம் ஜனவரி 2010 முதலும் மாதம் இருமுறை (ஒரு முறைக்கு 20,000 சுவரொட்டிகள் வீதம்) அச்சடிக்கப்பட்டு, மாவட்டங்கள் மற்றும் மாநகராட்சிகளிலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாக பொதுமக்கள் கூடும் இடங்களில் ஒட்டப்பட்டு நல்ல முறையில் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

'தமிழரசு' தமிழ் இதழ், திங்கள் இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு தமிழ் இதழின் விலை ரூ.10ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.120ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.1,000ஆகவும், 'தமிழரசு' ஆங்கில இதழின் விலை ரூ.15ஆகவும், ஆண்டுச் சந்தா ரூ.60ஆகவும், ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.500ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களின் சந்தாக்களின் எண்ணிக்கை 69,591 ஆகும். இதில் 56,206 ஆயுள் சந்தாக்களாகும்.

இணையதள வாசகர்களின் கவனம் பெறும் வகையில் தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்கள் தமிழக அரசின் www.tn.gov.in என்ற இணையதளத்திலும் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன.

**சிறப்பு வெளியீடுகள்**

**1) 'மக்கள் வாழ்வில் வளம் சேர்த்திட மகத்தான பணிகள்'**

சட்டப்பேரவையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து 29.6.2009 அன்று ஆற்றிய உரை.

**2) 'தொழில் வளர்ச்சியின் முன்னோடி மாநிலம் தமிழகம்'**

சட்டப்பேரவையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து 13.7.2009 அன்று ஆற்றிய உரை.

**3) 'அமைதி தவழ்ந்திடும் தமிழகம்'**

சட்டப்பேரவையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து 20.7.2009 அன்று ஆற்றிய உரை.

**4) 'கன்னடக் கவிஞர் சர்வக்ஞர்'**

சென்னை அயனாவரம் ஜீவா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலை திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்பட்ட சிறப்புக் கையேடு – 13.8.2009.

5) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 17, 18 செப்டம்பர் 2009 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய உரை.

6) Address of Honourable Minister for Information Government of Tamil Nadu Thiru.Parithi Ellamvazhuthi at the XXVII Conference of State Information Ministers at New Delhi.

**7) 'அயராது பணியாற்றும் அரசு'**

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.1.2010 அன்று ஆற்றிய உரை.

8) திருவள்ளுவர் திருநாளில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடமிருந்து அய்யன் திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய தமிழக அரசின் விருது பெறுவோரின் தகுதியுரை–15.01.2010.

**9) தமிழகத்தில் மிகச் சிறந்த பொதுவிநியோக முறை**

6.2.2010 மற்றும் 7.2.2010 ஆகிய நாட்களில் புதுதில்லியில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது குறித்தும், உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்தும் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் சார்பில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரைகளின் தமிழாக்கம்.

**10) உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவை 2010 –** தகவல் கையேடு (15.3.2010)

**பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா வெளியீடுகள்**

**1) “பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்”**

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாறு, அரிய ஒளிப்படங்கள், அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளைத் தாங்கி உயரிய தரத்தில் 588 பக்கங்களில் அச்சடிக்கப்பட்டு ரூ.500க்கு விற்கப்பட்டது.

2) **“அண்ணாவின் பொன்மொழிகள்” –** சிறு கையேடு

3) **“பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு” –** மடிப்பேடு.

4) **“அண்ணா 100”–** என்னும் இணையதளம் உருவாக்கப்பட்டு www.tn.gov.in இணையதளத்தில் இயங்கி வருகிறது.

## பொருட்காட்சி

பொருட்காட்சிகள் மூலம் அரசின் அனைத்துத் திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை மக்கள் எளிதில் அறிந்து கொள்ள இயலும் என்பதாலும், பொதுமக்கள் மாவட்டங்களில் பொருட்காட்சிக்குக் குடும்பத்துடன் வருகை தந்து, கண்டுகளித்துப் பயன்பெறலாம் என்பதாலும், அரசு சார்பாகவே பொருட்காட்சிகளை நடத்தலாம் என்று ஆணை வெளியிடப்பட்டு மக்களோடு தொடர்புடைய செய்தி–மக்கள் தொடர்புத் துறையால் பொருட்காட்சிகள் தமிழகம் முழுவதும் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. விழாக்காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகளை நடத்தினால், பெரிதளவில் மக்கள் வருகை தந்து பயன்பெற்றிட ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் ஏப்ரல் – ஜூன் மாதங்களிலும், சேலம் மாநகரில் ஜூலை – செப்டம்பர் மாதங்களிலும், ஆண்டுக்கொருமுறை திருநெல்வேலி அல்லது வேலூர் நகரிலும் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள் மக்களுக்கு பொழுதுபோக்காக அமைவதோடு நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பை அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில் நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம் பெறும் வகையில் அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பொருட்காட்சியிலும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அவர்களின் உற்பத்திப் பொருட்களை நன்முறையில் விற்பனை செய்ய இலவசமாகக் கடைகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. அரசுப் பொருட்காட்சிகளில் பங்குபெறும் அரசுத் துறைகளை ஊக்குவிக்க சிறந்த அரசுத் துறைகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை செய்தி, மக்கள் தொடர்புத் துறையால் 126 பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு சுமார் 22.07 கோடி ரூபாய் வருவாய் அரசுக்கு இலாபமாக ஈட்டித் தரப்பட்டுள்ளது. 2009–2010ஆம் ஆண்டில் நடந்த அரசுப் பொருட்காட்சிகள் விவரம் மற்றும் கண்டு பயனுற்றோர் விவரம் பின்வருமாறு:

| மாதம் | பொருட்காட்சி நடைபெற்ற இடம் | பொருட்காட்சி நடைபெற்ற நாட்கள் | கண்டு பயனுற்றோர் விவரம் | வசூலான அனுமதி கட்டணத் தொகை |
|---|---|---|---|---|
| ஜூன் 2009 முதல் செப்டம்பர் 2009 வரை | திருநெல்வேலி | 45 | 3,17,866 | ரூ.17,92,466 |
| ஜூலை 2009 முதல் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| செப்டம்பர் 2009 வரை | சேலம் | 60 | 6,23,311 | ரூ.29,18,945 |
| டிசம்பர் 2009 முதல் பிப்ரவரி 2010 வரை | வேலூர் | 45 | 2,24,670 | ரூ.10,51,478 |
| மொத்தம் | | 150 | 11,65,847 | ரூ.57,62,889 |

மேலும் மாவட்டங்களில் நடைபெறும் முக்கிய விழாக்களில் அந்தந்த மாவட்ட செய்தி–மக்கள் தொடர்புத் துறை அலுவலகங்கள் மூலம் சிறு கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இதற்கென ஆண்டுதோறும் ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இலாப நோக்குடன் தனியாரால் விதிமுறைகளின்றி நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள் முறைப்படுத்தப்பட்டு பொதுமக்களின் நன்மைக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டு, மாவட்டங்களில் தனியார் பொருட்காட்சிகள் முறையாக நடத்த செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மதநல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் புதுதில்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில் (ஞாடிடிட றுயடிடே முை ளுயசைந) தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி–மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாடு அரசு 2009ஆம் ஆண்டும் இப்பேரணியில் பங்கேற்றுப் பரிசு பெற்றது பெருமைப்படத்தக்கதாகும்.

சென்னை மற்றும் புதுதில்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தினவிழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்து கொள்வதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். தற்போது 26.1.2010 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் இரண்டாம் பரிசினையும் இத்துறை பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று, அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள் குறித்த விளக்கங்களை பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், மக்கள் சமூக விழிப்புணர்வு பெறும் வகையிலும், விளக்கப்படங்கள் மற்றும் காட்சி மாதிரிகளுடன் தனி அரங்கு அமைத்துப் பாராட்டுகளைப் பெற்றுவருகிறது. புதுதில்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும், தமிழகத்தின் சார்பில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்கள் வெளிக்கொணரப்பட்டு வருகிறது. மேலும் இப்பொருட்காட்சிகள் நடத்தப்படுவதன் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதுடன் அரசு இலாபம் அடையவும் வழி வகுக்கிறது.

பல்துறைப் பணி விளக்க முகாம்கள்

அரசின் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைத்து, அரசின் திட்டங்களையும், சாதனைகளையும், கொள்கை விளக்கங்களையும், பொதுமக்களுக்குப் பயன்தரும் வகையில் விளக்கக்கூடிய வகையில், பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடைபெறும்போது, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் விளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், மாவட்ட அளவில் கிராமங்களில் நடத்தப்படும் பொதுமக்கள் குறைகள் கேட்கும் மனு நீதி நாள் முகாம் நிகழ்ச்சிகளின் போதும் சிறிய அளவிலான பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு நல்வாழ்வுத் திட்டங்களைப் பொதுமக்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், விளம்பரப்படுத்தும் வழிமுறைகள் குறித்து, மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஆலோசித்து, முடிவுகள் மேற்கொண்டு விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் ஒரு முக்கிய அங்கமாகும். அரசு அறிவிக்கும் நலத்திட்டங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்வதுடன் அரசு நலத்திட்டங்களின் பலனை பயனாளிகள் முழுமையாகப் பெற்றிட ஏதுவாக அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்கும் பணியினையும் மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஊடகங்களுக்கு அரசின் செய்தி வெளியீடுகள் மற்றும் புகைப்படங்களை வழங்குதல், மக்கள் கூடுமிடங்களில் வீடியோ படக் காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப் பணி செய்தல், அரசு விழாக்களை நடத்துதல், பல்துறைப் பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு கண்காட்சிகள் நடத்துதல், நினைவகங்களைப் பராமரித்தல் போன்ற பணிகளைச் செய்தி– மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்து வருகிறார்கள்.

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி சிறக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களுக்கும் அரசின் சார்பில் புதிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், 'டிஜிட்டல்' நிழற்படக்கருவிகள், நிகரிகள், ஸ்கேனர்கள், நகலெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஆறு மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு இணையதள வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. விரைந்து பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தற்போது மாவட்ட
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் நவீன தகவல் தொடர்பு சாதனங்களுடன் புதுப்பிக்கப்பட்டு தன்னிறைவுடன் செயல்படுகின்றன.

மாவட்ட அலுவலகங்களில் உள்ள பழுதடைந்த ஊர்திகள், நிகரிகள், நகலெடுக்கும் கருவிகள் ஆகியவை படிப்படியாகப் புதுப்பிக்கப்பட்டு, பணிகள் தொய்வில்லாமல் நடக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2009–2010–ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களின் உபயோகத்திற்காக ரூ.12 இலட்சம் செலவில் 2 டெம்போ டிராவலர் வாகனங்கள் (வீடியோ வாகனங்கள்) வாங்கி வழங்கப்பட்டன.

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு ரூ.5.55 இலட்சம் செலவில் ஒரு டெம்போ டிராவலர் வாகனம் (வீடியோ வாகனம்) வழங்கப்பட்டது. மேலும், திரைப்படக்கருவிகள், அலுவலகத் தளவாடங்கள் ஆகியவை வழங்கப்பட்டு திருப்பூர் மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

## செய்தி நிலையங்கள்

செய்தி–மக்கள் தொடர்புத் துறையில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்செய்தி நிலையங்களில் பல்வேறு தலைப்புகளில் புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. செய்தி நிலைய நூலகங்களில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| செய்தி நிலையம் | புத்தகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சென்னை | 21,500 |
| மதுரை | 17,000 |
| திருச்சிராப்பள்ளி | 319 |
| தஞ்சாவூர் | 1,371 |
| கோயம்புத்தூர் | 1,400 |
| புதுதில்லி | 263 |
| மொத்தம் | 41,853 |

இச்செய்தி நிலையங்களை பள்ளி மாணவ, மாணவியர், கல்லூரி மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் பயன்படுத்தி வருகின்றார்கள்.

**மாநிலச் செய்தி நிலையம், சென்னை**

ஓமந்தூரரார் அரசினர் தோட்டத்தில் இயங்கி வந்த மாநிலச் செய்தி நிலையம், தற்போது சென்னை திருவல்லிக்கேணி, பாரதியார் இல்லத்தின் முதல் தளத்தில் 14.12.2009 முதல் செயல்பட்டு வருகிறது. மாநிலச் செய்தி நிலையத்தில் நூலகம் மற்றும் படிப்பகம் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகத்தில், தலைவர்களின் வரலாற்று நூல்கள், குழந்தைகள் நூல்கள், அறிவியல் நூல்கள், அரசியல் நூல்கள் மற்றும் பல்வேறு தலைப்புகளில் நூல்கள் உள்ளன. இது தவிர சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை இங்கு மேற்கோள் பணிக்காக உள்ளன. மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள படிப்பகத்தில் தமிழ், ஆங்கில நாளேடுகள், வார, மாத மற்றும் பருவ இதழ்கள் வாங்கப்பட்டு பொதுமக்கள் படிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் 100 முதல் 150 நபர்கள் வரை படிப்பகத்தைப் பயன்படுத்திப் பயன்பெற்று வருகிறார்கள்.

பருவ இதழ்கள், நாளேடுகள் சேகரித்து வைக்கப்பட்டு, அரசின் மேற்கோள் பணிக்காக தேவைப்படும்பொழுது வழங்கப்படுகிறது. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அரசு விழாக்களுக்குத் தேவையான குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசின் உயர் அலுவலர்கள் ஆகியோருக்கு மேற்கோளுக்காகவும் தரப்படுகின்றது. தமிழரசு இதழுக்குக் குறிப்பு

எடுத்துக் கொள்ளத் தேவையான நூல்களும், தகவல்களும் மாநிலச் செய்தி நிலையத்திலிருந்து வழங்கப்படுகின்றன.

மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள தகவல் பலகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சாதனைகள் மற்றும் பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட புகைப்படங்கள் பொதுமக்கள் பயன்பெறும் விதத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தற்போது மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் உள்ள பழைய புத்தகங்களைப் பாதுகாப்பான முறையில் பராமரிக்க, அவற்றினை அட்டையிட்டுத் தைக்கும் பணிகள் (Binding) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நிறைவுரை

**"தமிழகம் இந்தியாவின் இதர மாநிலங்களுக்குப் பல வழிகளில் முன்னோடியாக நின்று வழிகாட்டுகிறது. எந்தவொரு பணிக்கும் தமிழகமே முன்னோடி என்ற நிலை வர வேண்டும்; அது நிலைபெற வேண்டும்; தமிழக மக்கள் அனைவர் வாழ்வும் வளம் பெற வேண்டும்"**

- என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு பல்வேறு துறைகளிலும் முதல் நிலையை எட்டியுள்ளது. இந்த நன்னிலை என்றென்றும் தொடரவும், மென்மேலும் தமிழகம் எல்லாத் துறைகளிலும் உயரவும் மக்களுக்கும் அரசுக்கும் உறவுப்பாலமாக செய்தி மக்கள் தொடர்புத்துறை சிறந்த பணியை ஆற்றி வருகிறது.

**பரிதிஇளம்வழுதி**
செய்தித்துறைஅமைச்சர்
தமிழ்நாடு அரசு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இணைப்பு–1 | | | | | |
| வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2010–2011 | | | | | |
| | | நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில் | | | |
| | | **2008–2009** கணக்குகள் | **2009–2010** வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | **2009–2010** திருத்த மதிப்பீடு | 2010–2011 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2059 | பொதுப் பணிகள் | 75,97 | 65,70 | 90,43 | 68,98 |
| | | | | | |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 39,44,36 | 40,90,97 | 43,49,93 | 39,46,14 |
| | | | | | |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 34,96 | 42,75 | 43,15 | 44,55 |
| | | | | | |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் | 6,08 | 8,20 | 6,38 | 7,20 |
| | | | | | |
| 4220 | செய்தி விளம்பரம் குறித்த மூலதனச்செலவு | 4,96 | 1 | 10,45 | 1 |
| | | | | | |
| 6220 | செய்தி–விளம்பரத்திற்கான கடன்கள் | 5,43,42 | .. | .. | .. |
| | | | | | |
| | | | | | |
| | மொத்தம் | 46,09,75 | 42,07,63 | 45,00,34 | 40,66,88 |